# தமிழ்நாடு அரசு

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## எழிலகம் இணைப்புக் கட்டடம், சேப்பாக்கம், சென்னை-600 005.

அரசாணை (நிலை) எண். 71 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள். 7.10.2013ன் படி முழு நேர முனைவர் பட்டப் படிப்பு மேற்கொள்ளும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.50000/- வீதம் வழங்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க அரசாணை (நிலை) எண் : 5 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 29.1.2014ன்படி கீழ்க்கண்ட விதிமுறைகளுக்குட்பட்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

1) தமிழ்நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் முழுநேர முனைவர் பட்டப் படிப்பு **(Ph.D.,)** மேற்கொள்ளும் தமிழ்நாட்டைச் சார்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மாணவர்கள் மட்டும் விண்ணப்பிக்கத்தகுதி பெற்றவர். பகுதி நேர ஆராய்ச்சி மாணவர்கள் பயன்பெற இயலாது.
2) மாணவரது குடும்ப ஆண்டு வருமானம் மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் பயனடைய நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான வரம்பான ரூ. 2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3) முதுகலைப் பட்டப்படிப்பில் 50% விழுக்காடு பெற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
4) வேறு எந்தவிதமான கல்வி உதவித் தொகை / நிதியுதவித் திட்டத்தின்கீழ் பய ்ன்பெறுபவராக இருத்தல் கூடாது. மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியுதவி அல்லது பிறதிட்டங்களில் பெறும் நிதியுதவி இவற்றில் அதிக பயன்தரும் திட்டத்தை தேர்ந்தெடுக்க அனுமதிக்கலாம். குறைவான பயன்தரும் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதி உதவியை திரும்ப செலுத்த வேண்டும்.
5) எக்காரணம் கொண்டும் மாணவருக்கு அனுமதிக்கப்பட்ட படிப்புப் பிரிவுக் கால அளவிற்கு (Prescribed Duration of Course) மிகாமல் ஊக்கத்தொகை அளிக்கப்படும்.
6) ஆண்டொன்றிற்கு இத்திட்டத்திற்கான மொத்த செலவினம் ரூ. 3.50 கோடிக்கு மிகாதவாறு இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை முதல், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டுகளில் பயிலும் அனைத்து மாணவர்கள் உட்பட மொத்தம் 700 மாணாக்கர்களுக்கு மேல் மிகாதவாறு முதுநிலைப் பட்டப் படிப்பில் அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண் தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர்.
7) முதல் வருடம் சேர்க்கையின் அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகை வழங்கலாம். இரண்டாம், மூன்றாம், நான்காம் ஆண்டுகளுக்கு மாணவர் பயிலக்கூடிய படிப்பு பிரிவின் துறை தலைமை அலுவலர் (Head of the Department) மற்றும் ஆராய்ச்சி வழிகாட்டி அலுவலரால் (Guide) முந்தைய ஆண்டுகளில் மாணவரால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் திருப்திகரமான முன்னேற்றம் குறித்து அளிக்கப்படும் சான்றிதழின் அடிப்படையில் வழங்கப்படும்.
8) தேவை ஏற்படின் முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் 700 மாணவர்களில் கலைப்பிரிவு (Arts stream) அறிவியல் பிரிவு (Science stream) பொறியியல் பிரிவு (Engineering stream) மற்றும் பிற பிரிவுகள் போன்றவற்றிற்கு அந்தந்த வருடங்களில் விண்ணப்பிக்கும் மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தேவையான விகிதாச்சார எண்ணிக்கையில் பிரித்து வழங்கப்படும்.
9) விண்ணப்ப படிவத்தை தட்டச்சு செய்து விவரங்களை பூர்த்தி செய்து இவ்வலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய **கடைசி நாள். 31.01.2015.** அதற்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி, **இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை - 600 005.**

**ஆதிதிராவிடர் நலத்துறை**

**முழுநேர முனைவர் பட்டப் படிப்புப் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மாணாக்கர்களுக்கு ஊக்கத் தொகை பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்**

கடவுச் சீட்டு அளவு கல்வி நிறுவன முதல்வரின் சான்றொப்பம் இடப்பட்ட புகைப்படம் ஒட்டப்பட வேண்டும்

| | | |
|---|---|---|
| 1. | மாணாக்கரது பெயர் | |
| 2. | பாலினம் | |
| 3. | பிறந்த தேதி மற்றும் வயது | |
| 4. | சாதி உட்பிரிவுடன் (சான்றொப்பமிடப்பட்ட சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 5. | பெற்றோர் பெயர் | |
| 6. | நிரந்தர முகவரி | |
| | கதவு எண் மற்றும் தெருவின் பெயர் | |
| | கிராமம் / நகரப் பெயர் | |
| | வட்டப்பெயர் | |
| | மாவட்டப்பெயர் | |
| | அஞ்சல் குறியீட்டு எண் | |
| | தொலைபேசி எண் | |
| 7. | தற்போதைய முகவரி அஞ்சல் குறியீட்டுடன் | |
| 8. | குடும்ப ஆண்டு வருமானம் (விண்ணப்ப நாளில் ஆறு மாத காலத்திற்குள் பெறப்பட்ட அசல் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | |
| 9. | தேர்வு பெற்ற முதுகலைப்பட்டப் படிப்பு விவரம் (சான்றொப்பமிடப்பட்ட சான்று நகல் இணைக்கப்படவேண்டும்) | |
| 10. | முதுகலைப் பட்டப் படிப்பில் தேர்ச்சி விழுக்காடு | |
| 10அ | முதுகலைப் பட்டப் படிப்பில் தேர்ச்சி விழுக்காடு சான்றொப்பமிடப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும் | |
| 11. | முதுகலைப் பட்டம் பெற்ற கல்வி நிறுவன / பல்கலைக் கழக பெயர் மற்றும் முகவரி | |
| 12. | தற்போது பயிலும் முனைவர் பட்ட படிப்புப் பிரிவு மற்றும் அறுதியிடப்பட்ட மொத்த படிப்புப் பிரிவு காலம் | |
| 13. | தற்போது பயிலும் ஆண்டு | |
| 14. | முனைவர் பட்டப் படிப்பு மேற்கொள்ளும் கல்வி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | |
| 15. | முனைவர் பட்டப் படிப்புக்கு அங்கீகாரம் வழங்கும் பல்கலைக் கழகத்தின் பெயர் மற்றும் முகவரி | |
| 16. | முனைவர் பட்டப் படிப்புப் பயில பல்கலைக் கழகத்தால் ஆராய்ச்சிக் காலம் குறிப்பிடப்பட்ட அனுமதிக் கடிதம் இணைக்கப்பட்டுள்ளதா? (இல்லையெனில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்) | |
| 17. | அ) வேறு கல்வி உதவித் தொகை திட்டங்கள் அல்லது நிதி உதவித் திட்டங்களின் கீழ் பயன்பெறுபவரா? | |

| | | |
|---|---|---|
| | ஆ) ஆம் எனில் திட்ட விவரம் பெறப்பட்ட பணப்பயன் விவரம் | |
| | இ) இத்திட்டத்தின் கீழ் பயன்பெற மாணாக்கர் தேர்வு பெறுவாராயின் மாணவரின் விருப்புரிமையின்படி குறைவான பயன்பெறும் திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியுதவியை மாணாக்கர் திரும்பச் செலுத்த உறுதியளிக்கிறாரா? (ஆம்/இல்லை) | |
| | ஈ) திரும்பச் செலுத்துவதற்கான உறுதிமொழிச் சான்று இணைத்துள்ளாரா? | |
| 18. | மாணவரது சேமிப்புக் கணக்கு விவரம் (வங்கிக் கணக்கு தொடர்பான மின்னணுத் தீர்வை உரிமைக் கட்டளை (ECS Mandate Form) உரிய வங்கி அலுவலரிடம் கையொப்பம் பெற்று இணைக்கப்படவேண்டும்) | |
| | அ) சேமிப்புக் கணக்கு எண் | |
| | ஆ) வங்கியின் பெயர் மற்றும் கிளை முகவரியுடன் | |
| | இ) IFSC குறியீட்டு எண் | |
| | ஈ) MICR குறியீட்டு எண் | |
| 19. | இரண்டாமாண்டு மூன்றாமாண்டு மாணவர்களாயின் வழிகாட்டியின் குறிப்புரை மற்றும் பரிந்துரை இணைக்கப்பட்டுள்ளதா? (வழிகாட்டியின் கையொப்பம் மற்றும் பெயர், பதவி அலுவலக முத்திரையுடன்) | |

மேலே கொடுக்கப்பட்ட விவரங்கள் யாவும் உண்மையென சான்றளிக்கிறேன். தவறான விவரங்கள் சமர்ப்பித்தது பின்னர் கண்டறியப்படின் தற்போது ஒப்பளிக்கப்படும் கல்வி ஊக்கத் தொகை முழுவதையும் அரசு விதிக்கும் எவ்வழியிலும் திருப்பிச் செலுத்த உறுதியளிக்கிறேன். எனது ஊக்கத் தொகை விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும் ஏற்கிறேன்.

நாள்

மாணவரது கையொப்பம்

**கல்வி நிறுவனத் தலைவரின் பரிந்துரை**

மேலே விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விவரங்கள் சரியானவை என சான்றளிக்கிறேன். மாணவருக்கு ஊக்கத் தொகை வழங்க பரிந்துரைக்கிறேன்.

நாள்

கல்வி நிறுவன முதல்வரது கையொப்பம்
பெயர் மற்றும் அலுவலக முத்திரையுடன்

செ.ம.தொ.இ/1351/வரைகலை/2014